# ஊவ மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தித் தரங்கள்.

முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அதிகார சபை.

ஊவா மாகாண கல்வி அமைச்சு.

**உள்ளடக்கம்.**

**அறிமுகம்.............................................................................................................iii**

தூர நோக்கு,பணிக் கூற்று மற்றும் நோக்கம்.............................................................................iv

கல்விச் செயலாளரின் செய்தி..........................................................................................v

பொறுப்பு அதிகாரியின் செய்தி........................................................................................vi

**1.பிள்ளை அபிவிருத்தித் தரங்கள்......................................................................................1**

1.1. பிள்ளை அபிவிருத்தித் தரங்களுக்கான பிரிவுகள்..............................................................1

i. உடல் வளர்ச்சி..........................................................................................................1

ii. சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தி.................................................................................1

iii. புலனுணர்வு அபிவிருத்தி.............................................................................................1

iv. மொழி மற்றும் ஆரம்ப கால எழுத்தறிவு விருத்தி...............................................................1

**2.ஆசிரியர் அபிவிருத்தித் தரங்கள்**.......................................................................................2

**2.1. ஆசிரியர் அபிவிருத்தித் தரங்களுக்கான பிரிவுகள்...........................................................2**

i. ஆசிரியர் என்ற வகையில் தனிப்பட்ட மென் திறன்களை(soft skills) அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்...................................................................................2

ii. ஆசிரியர் என்ற வகையில் தமது தொழில் திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.......................................................................................2

iii. ஆசிரியர் என்ற வகையில் தமது கற்றல் கற்பித்தல் தொடர்பான திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்...........................................................................3

iv. முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்..................................................................3

**3.பௌதீக அபிவிருத்தி தரங்கள்...........................................................................................4**

3.1. சூழல் மற்றும் அமைவிடம்...........................................................................................4

3.2. கட்டடங்ங்கள்..........................................................................................................5

3.3. இட வசதிகள்..........................................................................................................6

3.4.நீர் மற்றும் சுகாதார வசதிகள்.......................................................................................7

3.5. பாலர் மேசை,கதிரை மற்றும் வேறு உபகரணங்களை ஒழுங்கமைக்கும் போது கடைபிடிக்க வேண்டிய தரங்கள்.

I. மேசை......................................................................................................................7

II. கட்டடங்கள்..............................................................................................................7

III. இட வசதி. நீர் மற்றும் சகாதார வசதிகள்........................................................................7

IV. வேறு உபகரணங்கள்...................................................................................................7

V. விளையாட்டு முற்றம்.....................................................................................................8

கையாளும் வெளியீடுகள் மற்றும் ஆவணங்களின் பெயர்ப் பட்டியல்.11முன் பிள்ளை அபிவிருத்தி தரங்கள் தயாரிப்பில் பங்களிப்பு நல்கிய குழுவினரின் பெயர்ப் பட்டியல்.........................................................12

அறிமுகம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பௌதீக வளங்களை விஞ்சி மனித வளம் தரத்திற்கு காரணமாகிறது. மனித வள தரத்தின் அடிப்படையாக அமைவது கல்விச் செயற்பாடாகும்.இதனடிப்படையில் இலங்கையின் சன சமூகத்தின் முன் பிள்ளைப் பருவ குழந்தைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் உருவாக்கப்பட்டு அவை உறுதிப்படுத்தப்பட்டு விருத்தியடைந்து வருகின்றது. இதனடிப்படையில் முன் பிள்ளை அபிவிருத்தி மற்றும் கல்விச் செயற்பாடுகள் என்ற வகையில் தேசிய மட்டத்தில் கொள்கைகள் மற்றும் தரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களில் நடைமுறையிலுள்ள பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகளை வலுப்படுத்துவது ஊவா மாகாண முன் பிள்ளை அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பான பணியாகும்.இதற்கென அடிப்படை பங்களிப்பை நல்குவது முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்களும் பொறுப்பாளர்களுமே ஆவர். ஊவா மாகாணத்தின் முன் பிள்ளை அபிவிருத்தியை மையமாகக் கொண்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன முன் பிள்ளை அபிவிருத்தி அதிகார சபையின் இணைப்பின் அடிப்படையில் ஒன்றிணைந்த பிரவேசத்துடன் செயற்படுகின்றன.

கடந்த காலங்களில் ஊவா மாகாணத்தில் முன் பிள்ளப் பருவ அபிவிருத்திக்காக பௌதீக மற்றும் மனிதவளம் தொடர்பான தரங்கள் தயாரிக்கப்படாமல் இருந்த காரணத்தினால் 2014/2 இலக்க ஊவா மாகாண முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி சாசனத்திற்கிணங்க மாகாணத்தின் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கென பங்களிப்பு நல்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துக்கள் மற்றும் நிதி மற்றும் நிதி மூலங்களை ஆராய்ந்து மாகாணத்தின் முன் பிள்ளைப்பருவ குழந்தைகளுக்காக இவ்வாறான பௌதீக மற்றும் மனித தரங்கள் தயாரிக்கப்படுகின்றன..

## தூர நோக்கு.

மகிழ்ச்சிகரமானதும் துடிப்பானதுமான முன் பிள்ளைப் பருவத்தினூடாக சிறந்த பிள்ளை.

## பணிக்கூற்று.

"அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பிள்ளைகளின் வினைத்திறன் மிக்க கற்றலுக்கு போஷித்தல் பாடசாலை ஆசிரியர்களின் திறன் விருத்தி உடல் மற்றும் உள ரீதியின் அபிவிருத்தியினூடாக அவர்களின் முன் பிள்ளைப் பருவ குழந்தைகளின் அடிப்படைத் திறன்களை விருத்தி செய்தல் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கென அடிப்படை பௌதீக வசதிகளை வழங்குவதற்கென புரிந்துணர்வுடன் குடும்ப மட்டத்தில் பிள்ளை அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரிவு படுத்தலும் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் மேற்பார்வையும்."

## நோக்கம்.

ஒரு பிள்ளையின் முன் பிள்ளைப் பருவமெனக் கருதப்படும் ஐந்து வயது பூர்தியடையும் வரையிலான காலத்தினுள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கெனவும் உரிய முறையில் வழிப்படுத்துவதற்காகவும் பொருத்தமான, உசிதமானதுமான, நீதி, நிறுவனம் சார், மற்றும் நிருவாகக் கட்டமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

**கல்விச் செயலாளரின் செய்தி**

ஒரு நாட்டின் செயற்பாடுகளில் அடிப்படையாகக் காணப்படுவது கல்வியாகும். அதற்கென முகாமைத்துவ செயற்பாடுகளின் தரத்தை உறுதிப்படுத்துவது மிக முக்கிய தேவையாகும்.எமது நாட்டின் முன் பள்ளி முறைமையில் உள்ளீடாக பயன்படுத்தப்படும் மனித மற்றும் பௌதீக வளங்கள் உரிய முறையில் தரம் வாய்ந்த அடிப்பயையில் முகாமைத்துவம் செய்யப்படுமேயானால் தரத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். அதற்கான அடிப்படையான முன் நடவடிக்கையாக முன் பள்ளியை அடிப்படையாகக் கொண்ட பிள்ளைகள் மற்றும் பௌதீக தரங்கள் என்பனவற்றை முன் பள்ளி ஆசிரியர் ஒருவர் விருத்தி செய்து கொள்ளக் கூடிய பொதுவானதும் விசேடமானதுமான தேர்ச்சிகள் இந்த வெளியீட்டில் முன்வைக்கப்பட்டிருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சகல முன் பள்ளிகளிலும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தக் கூடிய சகல அம்சங்களும் மூன்று பிரதான துறைகளில் உள்ளடக்கி ஆசிரியர்,பிள்ளை மற்றும் பௌதீக தரங்களை, சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட மதிப்பீட்டு மேற்பார்வை ஆவணமொன்றினை கல்வி முறைமையில் ஸ்தாபித்து முன் பள்ளி ஆசிரியர்கள் உட்பட முகாமைத்துவ அணிக்கு பிழையின்றி தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலும் அதே வேளை, அனைத்து முன் பள்ளிகளிலும் கற்கும் பிள்ளைகளுக்கு சம கல்வி வாய்ப்பினை வழங்குவதற்கும் வளங்களின் வினைத்திறனை உருவாக்குவதற்கும் இதன் மூலம் வசதியளிக்கப்படுகின்றது.

அதுபோன்றே, இக் கையேட்டில் அறிமுகப் படுத்தியுள்ள பிள்ளைகளின் தரங்கள்,ஆசிரியர் தரங்கள் மற்றும் பௌதீகத் தரங்கள் என்பனவற்றை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் அவற்றின் தரப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு முன் பள்ளி ஆசிரியர்களும் பணிக்குழுவினரும் இணைந்து முன் பள்ளி முகாமைத்துவக் குழுவினை வலுப்படுத்துல், நிறுவனத்தின் பண்டபுசார் தரத்தினை விருத்தி செய்தல்,முகாமைத்துவ மற்றும் ஆசிரியர் தொழில்சார் கொள்ளாற்லை விருத்தி செய்தல்,முன் பள்ளிகளின் பலங்களை இனங்காண்பதற்கு முன் பள்ளி சமூகத்திற்கு வாய்ப்பினை வழங்குதல் போன்ற அனேக பிரதிகூலங்களை அடைந்து கொள்வதற்கு முடியும்.

எனவே, அனைத்து முன் பள்ளி ஆசிரியர்களும் முன் பள்ளி முகாமைத்துவக் குழு மற்றும் உத்தியோகத்தர்களுக்கென தரத்துடன் கூடிய தமது கடமைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனூடாக மாணவர்களுக்கு உயர் தரத்திலான கல்வியை வழங்குவதற்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளது என கூறிக் கொள்ள விரும்புகிறேன்.அதற்கென இந்த வெளியீட்டில் உரிய அறிவுறுத்தல்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு ‘‘தரமான சமூகம் ஒன்றிற்கு தரமான கல்வி’’என்ற தூர நோக்கினை யதார்த்தமாக்கிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டல் பற்றி முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கும் இதற்கென பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன். அதே போன்று முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி ஆசிரியர்கள், பிரதான பாடசாலைகளின் ஆசிரிய ஆலோசகர்கள்,செயற்றிட்ட உத்தியோகத்தர்கள்,குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள்,சுகாதார முகாமையாளர்கள் மற்றும் சிறுவர் உரிமை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற கூட்டாக ஒத்துழைப்பு நல்கிய அனைவரினதும் பங்களிப்பை பெரிதாக மதிப்பதோடு இனங்காணப்பட்ட தரச் சுட்டிகள் மற்றும் தேர்ச்சிகளை வினைத்திறன் மிக்க வகையில் பாவித்து முன் பள்ளிகளின் கல்வித் தரத்தை பாதுகாத்துக் கொள்ளுதல் அனைத்து கல்விப் பணியாளர்களதும் பொறுப்பாகும் என்று தெரிவிக்கிறேன்.

பொறுப்பதிகாரியின் செய்தி.

ஒரு பிள்ளையின் முன் பிள்ளைப் பருவமெனக் கருதப்படும் ஐந்து வயது பூர்தியடையும் வரையிலான காலத்தினுள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கெனவும் உரிய முறையில் வழிப்படுத்துவதற்காகவும் பொருத்தமான, உசிதமானதுமான நீதி, நிறுவனம் சார், மற்றும் நிருவாகக் கட்டமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புதல். தரத்துடன் கூடிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு முதற் படியாக முன் பிள்ளைப் பருவத்தைக் குறிப்பிட முடியும். 3-4 வயதுப் பிள்ளைகளின் முன் பிள்ளைப் பருவ கல்வித தரத்தை உறுதிப்படுத்துவதற்கு முன் பிள்ளைப் பருவ தரங்கள் முக்கியமாகின்றன.எனவே,பிள்ளைகள் செயலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கான தரங்கள் மற்றும் ஊவா மாகாணத்தின் முன் பிள்ளை அபிவிருத்தி அதிகார சபையினூடாக தயாரிக்கப்படுகின்ற ஆசிரியர் அபிவிருத்தி மற்றும் பௌதீக வள அபிவிருத்தித் தரங்களை செயற்படுத்துவதன் மூலம் மாகாணத்தின் சகல முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களினதும் தரத்தை அபிவிருத்தி செய்வது எமது நோக்கமாகும். இந்த தரங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் முன் பிள்ளைப்பருவ ஆசிரியர்களின் தொழிலுக்கு அமைவாக உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்வதைப் போன்றே நிலையங்களில் எதிர் பார்க்கப்படும் இலக்கை நோக்கி அண்மிக்க முடியும்.முன் பிள்ளைப் பருவ உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் படிப்படியாக எதிர்கால நோக்கினை உயர்வாக்கிக் கொள்ள முடியும்.அத்தோடு பிள்ளைகளின் தேர்ச்சிகளை விருத்தி செய்வதும் ஒரு குறிக்கோளாகும்.

பேதமற்றதும் வகைப்படுத்தலுமற்ற வகையில் மாகாணத்தின் சகல முன் பள்ளிகளையும் அபிவிருத்தி செய்வதே நம் அனைவரதும் நோக்கமாகும்.

# ஊவ மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கான தரங்கள் அடங்கிய பிரதானத் துறைகள்.

1. பிள்ளை அபிவிருத்தித் தரங்கள்.
2. ஆசிரியர் அபிவிருத்தித் தரங்கள்.
3. பௌதீகத் தரங்கள்.

## 1.பிள்ளை அபிவிருத்தித் தரங்கள்.

1.1.பிள்ளை அபிவிருத்தித் தரங்களுக்கான அபிவிருத்திப் பிரிவுகள்.

I. உடல் விருத்தி.
II. சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தி.
III. புலனுணர்வு விருத்தி.
IV. மொழி மற்றும் முன் எழுத்தறிவு விருத்தி.

சிறுவர் செயலக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கென தேசிய மட்ட குழுக்களில் அங்கம் வகிக்கும் சகல உறுப்பினர்களினதும் தலைமையில் 2015 நவம்பர் மாதம் 19 ஆந் திகதி சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள 3-5 வயதிற்கிடையிலான குழந்தைகளுக்கென தயாரிக்கப்பட்டுள்ள முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தித் தரங்களை ஊவா மாகாணத்தின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையினால் எதிர்வருங் காலங்களில் சிறுவர் அபிவிருத்தித் தரங்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.( அதற்கான தரங்கள் இணைப்பு 01 இல் இணைக்கப்பட்டுள்ளது)

2.1. ஆசிரியர் அபிவிருத்தித் தரங்களுக்கான அபிவிருத்திப் பிரிவுகள்.

1. முன் பிள்ளைப் பருவ ஆசிரியர் என்ற வகையில் தனிப்பட்ட மென் திறன்களை(soft skills) திறன்களை வெளிப்படுத்துவார்
2. முன் பிள்ளைப் பருவ ஆசிரியர் என்ற வகையில் தமது தொழில் திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.
3. முன் பிள்ளைப் பருவ ஆசிரியர் என்ற வகையில் தமது கற்றல் கற்பித்தல் தொடர்பான திறன்களை வெளிப்படுத்துவார்.
4. முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய ஆசிரியர் என்ற வகையில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் திறன்களை வெளிப்படுத்துவார்.

**i.** ஆசிரியர் என்ற வகையில் தனிப்பட்ட மென் திறன்களை(soft skills) அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

- ❖ வலுவான தொழில் நன்னடத்தையுடன் செயலாற்றுவார்.(உதா.நடைஉடை,பாவனை)
- ❖ நேர் ரீதியான மனப்பாங்குடன் செயலாற்றுவார்.
- ❖ சிறந்த தொடர்பாடல் திறனுடன் செயலாற்றுவார்.
- ❖ நேரத்தை சிறந்த முறையில் முகமைத்துவம் செய்து செயலாற்றுதல்.(உதா:தினமும் கடமைக்கு சமுகமளித்தல், உரிய நேரத்திற்குள் சேவையில் ஈடுபடுதல் )
- ❖ பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனுடன் செயலாற்றுதல்.
- ❖ சிறந்த குழு ஊறுப்பினர் என்ற அடிப்டையில் செயலாற்றுதல்.
- ❖ தன்னம்பிக்கையுடன் சவால்களுக்கு முகங் கொடுக்கும் திறன்.

**ii.** ஆசிரியர் என்ற வகையில் தமது தொழில் திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

- ❖ முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு அமைவாக ஒரு வருடத்துக்குக் குறையாத ஏற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா பாட நெறியை பின் பற்றியிருத்தல்.
- ❖ முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு அமைவாக அழகியல் பயிற்சிப் பாடநெறியை பின்பறியிருத்தல்.
- ❖ கற்றல் வட்டம் தொடர்பான பயிற்சியைப் பெற்றிருத்தல்.
- ❖ சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சி மட்டும் பாடநெறியைப் பின் பற்றியிருத்தல்.மொழி, தொழில் நுட்பம் மற்றும் உபகரணப் பாவனை மற்றும் சமூக ஒருமைப்பாடு தொடர்பான ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய ஆற்றல்கள்.

**iii**.ஆசிரியர் என்ற வகையில் தமது கற்றல் கற்பித்தல் தொடர்பான திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

- ❖ மாகாண கல்வியமைச்சு /முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட கலைத்திட்டம் மற்றும் பணிப்பகிர்விற்கு இணங்க செயலாற்றுவார்.
- ❖ குழந்தைகளின் உடல் மற்றும் உள ரீதியான ஆர்வங்களுக்கு பொருந்தும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்துவார்.
- ❖ தினசரி, வாராந்த, மாதாந்த வருடாந்த திட்டங்களுக்கு இணங்க செயலாற்றுவார்.
- ❖ பொருத்தமான உபகரணங்களை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவார்.
- ❖ பிள்ளைகளின் அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்யும் போது முறையான மதிப்பீட்டு செயற்பாடுகளுக்கு இணங்க செயலாற்றுவார்.
- ❖ முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களில் கலாசார மற்றும் ஏனைய வைபவங்களின் போது மற்றும் பௌதீக வளங்களை முறையாக முகாமைத்துவத்தின் அடிப்படையில் பயன்படுத்துவார்.

**iv.** முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் திறன்களை அடைந்து கொள்ளும் போது கீழ்க்காணும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்

- ❖ தேசிய மற்றும் மாகாணக் கொள்கைகள் / தரங்களுக்கு அமைவாக செயலாற்றுவார்.
- ❖ குழந்தைகளின் தாய்,தந்தை மற்றும் பாதுகாவலர் தொடர்பாக பூரண அறிவுடன் செயலாற்றுவார்.
- ❖ தாய்,தந்தை மற்றும் பாதுகாவலர் தொடர்பான அறிக்கைகளை பேணுவார்.
- ❖ குழந்தை நிலையத்துக்கு சமுகமளித்தல் மற்றும் வெளியேறுதல் தொடர்பாக தெளிவுடன் செயலாற்றுவார்.
- ❖ வாகன சாரதிகள் மற்றும் பாதுகாவலர் தொடர்பான கடிதங்கள் மற்றும் பதிவுகளை பேணுவார்.
- ❖ குழந்தைகள் நிலையத்திலிருந்து வெளியில் செல்லும் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையொன்றினை கடைபிடிப்பார்.
- ❖ போஷாக்குள்ள உணவினை குழந்தைகளுக்கு வழங்குதல் மற்றும் வளர்ச்சி தொடர்பான பதிவுகளை நடைமுறைப்படுத்துவார்.
- ❖ முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய அபிவிருத்தி சங்கம் மற்றும் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையின் எதிர் பார்த்த மட்டத்தைப் பேணுவார்.( முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் பெற்றார் அபிவிருத்தி சங்கங்களை அமைத்தல் தொடர்பான ஒழுங்கு விதிக் கோவைக்கு இணங்க)
- ❖ பங்கேற்றல் அணுகுமுறையின் அடிப்படையில் ஐந்தாண்டு மற்றும் ஓராண்டு அழிவிருத்தித் திட்டம் தயாரித்து அதனடிப்படையில் செயலாற்றுவார்.
- ❖ முன் பிள்ளைப்பருவ அதிகார சபை மற்றும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்பி செயலாற்றுவார்.
- ❖ கற்றல் வட்டம் மற்றும் பாட இணைச் செயற்பாடுகளை முறையாகப் பிரயோகித்துச் செயலாற்றுவார்.
- ❖ நிலையத்துக்குரிய ஆவணங்கள் மற்றும் நூல்களை முறையாகப் பேணுவார்.
- ❖ பாட இணை மற்றும் புறகிருத்தியச் செயற்பாடுகளில் பெற்றார் மற்றும் சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுச் செயலாற்றுவார்.
- ❖ முன் பள்ளி ஊட்டப் பிரதேசத்தினுள் முன் பள்ளிக்குச் செல்லாத பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்.

# 3.பௌதீகத் தரங்கள்.

## 3.1. நிலவமைப்பு.

1)நிலையத்தின் நிலவமைப்பு இயற்கை மற்றும் மனித செயற்பாடுகளினால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மற்றும் உபத்திரவங்களற்றதாக காணப்படுகின்றமை.

**<u>இயற்கையால்.</u>**

சுற்று வளவில் கிணறு கால்வாய், (Cannal)ஓடை, (Brook) கைவிடப்பட்ட இடங்கள், மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்கள்,கற்கள் உருண்டோடக் கூடிய சரிவான இடங்கள், முற்புதர்கள் புற்றுகள் (பாம்புகள் இருக்கக் கூடிய) விஷ ஜந்துக்கள் ஊருகின்ற வன வாயில்கள் அண்மித்ததற்ற இடமாக காணப்பட வேண்டும்.

**<u>மனிதச் செயற்பாடுகள்.</u>**

பாரிய மின் கம்பிகள், எரிபொருள் நிரப்பும் இடங்கள்,ஒலிபெருக்கிக் கோபுரங்கள், பாதுகாப்பற்ற கிணறுகள் மற்றும் புகையிரத ஓடு பாதை என்பனவற்றுக்கு அண்மித்த இடமாக காணப்படாமை.

2. ஊவா மாகாண சபையில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள சுற்றாடல் சாசனத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சூழல் துஷ்பிரயோக நபர்களிடமிருந்து விலக்கப்பட்டுள்ளதாகக் காணப்பட வேண்டும்.

தொழிற்சாலைகள்,கல்ஆலைகள்,அரிசி ஆலைகள்,கற்குழிகள்,குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்களை புதைக்கப்படுகின்ற இடங்கள்,குப்பைகளை மீள் சுழற்சிச் செய்கின்ற இடங்களுக்கு 500 மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்திருத்தல் வேண்டும்.

சிறுவர்களின் சிந்தனைக்கு,நடத்தை விருத்திக்கு அனுகூலமான சுற்றாடலாக இருக்க வேண்டும்.மதுபான விற்பனை நிலையங்கள் திரைப்படக் கூடங்கள்,இருவட்டுக் காட்சிகளை விற்கும் இடங்கள் ஒலிப்பதிவு செய்யப்படும் இடங்கள் என்பனவற்றிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல்.

மேற்படி காரணங்களுக்கு மேலதிகமாக கீழ்க்காணும் தரங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

- முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய கட்டடங்களின் கதவுகளை பாதுகாப்பற்ற வகையில் பிரதான வீதியை நோக்கியதாக அமைக்கக் கூடாது.

I. பிரதான வீதியை நோக்கியதாக காணப்படும் சகல காணி எல்லையையும் 2 ½ அடி உயரமான தடுப்புச் சுவராலும் 4 அடி உயரமான சல்லடைக் கம்பியாலும் மறைக்கப்பட்டிருத்தல்.
II. கட்டடம் அமைந்துள்ள நிலப்பகுதிக்கு தரைச் சமத்தவத் தன்மைக்கு அமைவாக வேலி அமைக்கப்பட வேண்டும்.
III. முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய காணி முழுப்பகுதியின் 1/8 ற்குக் குறைந்த தாவரங்களினால் மறைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். (அங்கு அந்த பிரதேசத்திற்கே உரித்தான பிள்ளைகளுக்கு பயனளிக்கக் கூடிய பழங்கள் மற்றும் மூலிகைத் தாவரங்கள் காணப்படுகின்றமை)
IV. கற்றல் வட்டம் மற்றும் திறந்த வெளி விளையாட்டுகளுக்காக போதியளவு இடவசதி இருத்தல் வேண்டும்.(உதா.மணல்தரை, நீர் தடாகம், கலாசார வட்டம், சுற்றாடல் வட்டம் என்பனவற்றை கட்டியெழுப்புவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்,செயற்பாட்டு தளம்,கற்றல் வட்டம், வாழ்க்கைத் தேர்ச்சி வட்டம்,சுற்றாடல் ஆய்வு வட்டம்.)

## 3.2. கட்டடம்.

1) கட்டடங்கள் பிள்கைளின் சுகாதார பாதுகாப்பிற்கு அனுகூலமானதாக இருத்தல் வேண்டும்.

2) சகல கட்டடங்களும் நிரந்தரக் கட்டடங்களாக இருத்தல் வேண்டும்.)**கூரை-** ஓடு அல்லது தகரம்,/**சுவர்**-செங்கள் அல்லது சீமெந்துக் கல;/**தரை-** சீமெந்து அல்லது பொருத்தமான தரை ஓடு)

3.3. இடவசதி.

1) ஆசிரிய மாணவர் விகிதாசரம் 1:20 எனவும் விசேடத் தேவையுள்ள பிள்ளைகளுக்காக 1:5 எனவும் அமைதல் வேண்டும்.
2) கட்டம் ஒரு பிள்ளைக்கு குறைந்த பட்சம் 10 சதுர அடியாகவோ அதற்குக் கூடியதாகவோ இருக்கும் அதே வேளை ஆசிரியர் மாணவர்களுக்காக தேவையான காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் பெறுவதற்காக மொத்த சதுர அடி அளவின் 1/7 அல்லது அதற்கு அதிகமான அளவு இருக்கக் கூடியதாக கதவு,யன்னல் மற்றும் துவாரங்கள் அமைக்கப்பட வேண்டும்.
3) சகல கட்டடங்களுக்கும் உட்செல்லும் வழி வலது குறைந்த மாணவர்களுக்கென உட்செல்லக் கூடிய வகையில் அமைந்திருத்தல்.(கல்வி அமைச்சின் 2007.05.17ஆந் திகதிய 2007/09 ஆம் இலக்க அறிவுறுத்தல் சுற்று நிருபத்திற்கு இணங்க)
4) கட்டடத்தில் அரைச்சுவர் இருக்கும் பட்சத்தில் அது 1 மீற்றர் உயரத்தில் இருப்பதோடு மழை,காற்று மற்றும் அதிக சூரிய ஒளியிலிருந்த பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.

I. சகல நிலையங்களிலும் முதலுதவிப் பெட்டி வைக்கப்படல் வேண்டும்.(முதலுதவி உபகரணங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மருந்து வகைகளுடன் கூடியதாக)
II. கட்டடங்களின் உள்ளேயும் வெளியேயும் பிள்ளைகளுக்கு கவர்ச்சியானதும் பொருத்தமான நிறம் மற்றும் சித்திரங்கள் காணப்பட வேண்டியதோடு வெளிச் சூழல் பிள்ளைகளுக்கு உசிதமானதாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.(வீட்டுத் தோட்டம், பூம்பாத்தி கழிவகற்றும் பொறிமுறை மற்றும் நீர் வழிந்தோடக் கூடிய ஏற்பாடுகள போன்றன)
III. கழிவுப் பொருட்கள் வேறுபடுத்தி அகற்றப்படல் வேண்டும்.(கடதாசி,உக்கிப்போகும் உக்கிப் போகாத என்ற அடிப்படையில் வேறுபடுத்தப்பட வேண்டும்.)
IV. சமய வழிபாட்டுக்காக பொருத்தமான இடம் இருக்க வேண்டும்.
V. பிள்ளைகளுக்குத் தேவையான மேசைகள்,கதிரைகள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.
VI. பிள்ளையொன்றின் அவசர சுகயீனத்தின் போது பாவிப்பதற்கென கட்டில் அல்லது பொருத்தமான இடம் ஒன்று காணப்படல்.
VII. பிள்ளைகளின் வளர்ச்சியை அளவீடு செய்வதற்கென பயன்படுத்துவதற்கென உபகரணத் தொகுதி நடைமுறையிலுள்ளமை.(உதா.நிறையை அளப்பதற்காக தராசு ஒன்று)

VIII. முன் பள்ளியின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக பொருத்தமான முறையியல்மற்றும் உபகரணங்கள் காணப்படகின்றமை.

### 3.4. நீர் மற்றும் சுகாதார வசதிகள்.

சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு தொடர்பான தரங்களை ஊவா மாகாணத்தில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையினால் எதிர்வரும் காலங்களில் பயன்படுத்தப்படும்.

1. 30 பிள்ளைகளுக்கென மலகூடம் ஒன்றும் சலகூடம் ஒன்றும் (பிரதேசத்துக்கு அமைவாக) குறைந்த பட்சம் ஒரு நீர்க் குழாயிலாவது நீரைப் பெற்றுக் கொளவதற்கு வசதிகள் காணப்பட வேண்டும்.
2. இந்த நீர் மற்றும் சகாதார பாதுகாப்பு வசதிகள் பிள்ளைகளுக்கு பாவிக்கக் கூடிய உயரத்தில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும்.உடல் ஊனமுற்ற பிள்ளைகளுக்கென உட்செல்லும் வசதிகளும் ஏனைய வசதிகளும் காணப்பட வேண்டும்.

### 3.5. சிறுவர் மேசை,நாற்காலிகள் மற்றும் ஏனைய உபகரணங்களை தயாரிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய தரங்கள்.

I. **மேசை:**
வட்டமானதெனின் பரப்பளவு 3 அடி உயரமும் 20 அங்குலமாகவும் இருத்தல் வேண்டும்.
சதுர வடிவானதெனின் 20 அங்குல உயரமும் 3 அடி அகலமும் 3 அடி நீலமுமாக இருத்தல் வேண்டும்.

II. **நாற்காலி:**
கால்களின் உயரம் 12 அங்குலமாகவும் நீளம் 1 அடியாகவும் அகலம் 1 அடியாகவும் கைச் சட்டகம் 24 அங்குலமாகவும் இருக்க வேண்டும்.

III. **ஏனைய உபகரணங்கள்.**

1) பிள்ளைகள் பாவிக்கக் கூடிய வகையில் சுவர்க் கரும்பலகை இருத்தல் வேண்டும். (தரையிலிருந்து 18 அங்குல உயரம்)
2) கால் துடைப்பம்.Rush-mat, கம்பளம்,பாய் போன்றவை போதிய அளவில் இருத்தல் வேண்டும்.
3) அறிவித்தல் பலகை ஒன்று இருத்தல் வேண்டும்.
4) அழகியல் உபகரணங்கள் போதிய அளவு இருத்தல் வேண்டும்.
5) போதிய அளவு கற்றல் உபகரணங்கள் இருத்தல்.
6) சமையலறை ஒன்றும் அதில் கோப்பைகள் குவளைகள் உணவு சமைப்பதற்கான பாத்திரங்கள் மற்றும் அவற்றை வைப்பதற்கு பொருத்தமான இடம் இருத்தல்.
7) பிள்ளைகளுக்குப் பாவிப்பதற்காக சிறிய ஈர்க்கு,தும்புதடி,கால் துடைப்பம்,கைத்துடைப்பு மற்றும் கழிவுப் பொருட்களை போடுவதற்கான உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.
8) பிள்ளைகளின் சித்திரம் போன்ற ஆக்கங்களை காட்சிப்படுத்துவதற்காக சுவரில் போதியளவு இடம் அல்லது பலகைகள் மூலம் இடவசதி வேறுபடுத்தப்பட்டுள்ளமை.
9) பிள்ளைகளின் அறிக்கைகள், விளையாட்டுப் பொருட்கள் புத்தகங்கள் மற்றும் வேறு பாதுகாக்கப்பட வேண்டியவை சம்பந்தமாக களஞ்சிய அறை ஒன்றோ அல்லது வேறு வசதிகள்.(அலுமாரி,கபோர்ட்,இராக்கை என்பன) இருத்தல் வேண்டும்.
10) கட்டடத்தின் இடவசதிக்கு ஏற்ப பிள்ளைகளின் போத்தல்கள் உறைகள்,குடை என்பனவற்றை வைப்பதற்காக போதியளவு இடம் ஒதுக்கப்பட வேண்டும்.
(அதனை ஆசிரியை ஆக்க ரீதியாக தேவையான இட வசதிகளைப பாவிக்க வேண்டும்)

**iv. விளையாட்டு முற்றம்.**

விளையாட்டு முற்றம் ஒவ்வொன்றுக்கும் வேறான 7 பிரிவுகள் உண்டு.அந்த ஒரு பிரிவின் கீழ் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப விளையாட்டு உபகரணங்கள் ஒன்றோ சிலவோ இருக்க வேண்டும்.

1) **ஏறுவதற்கு உரிய செயற்பாடுகள்.**

- கித்துல ஏறுதல்.
- மலையேறுதல்.
- ஏணியில் ஏறுதல்(சிறட்டை,கம்பு,பலகை.)
- சதுர வடிவ சல்லடை
- பிரமிட்டில் ஏறுதல்.
- அட்டிலில் ஏறுதல்.
- பங்கரில்
- சறுக்கும் தோணி.

2) **நுழைவதற்கும் தவழ்ந்து செல்வதற்குமான செயற்பாடுகள்.**

- கம்பு வில் வளைவு. (Arch)
- பாய் சுரங்கம்/பெரல் சுரங்கம்.
- சுரங்க வழி மற்றும் அறை.
- டயர் சுரங்கம்.

3) **சமநிலை செயற்பாடுகள்.**

- தோணி.
- டயரின் மேல் நடத்தல்.
- சங்கிலிப் பாலம்.
- கொடிப் பாலம்.
- தேங்காய் சிறட்டை பொய்க் கால்.
- ஊஞ்சல்.

4) **திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கு அமைவான விளையாட்டுக்கள்.**

- (pendulum) ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு பாய்தல்.
- பல்லாங்குழி ஆட்டம்.பொருத்தமான இடத்தில் அமைத்தல்.

5) **நடப்பதற்கான செயற்பாடுகள்.**

- பலகை மீது நடத்தல்.
- சுதந்திரமாக நடத்தல்.
- பாக்கு மட்டையில் நடத்தல்.
- புகையிரதப் பாதை.

**6) பாய்வதற்கான செயற்பாடுகள்.**

- மணற் கிணறு.

**7) வீசுவதற்கான.**

- பந்து எறிதல்.
- இலக்கை நோக்கி அடித்தல்.

**8) வேறு.**

- விளையாட்டு வீடு.
- விளையாட்டுக் கடை.
- விளையாட்டு அலுமாரி.

தொடர்புடைய வெளியீடுகளும் ஆவணங்களும்.

1. சிறுவர் தரங்கள்.(சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு 2015.11.19 திகதி வெளியிடப்பட்ட Early childhood development standards for Sri Lankaan Children)
2. ஆசிரியர் அபிவிருத்தி தரங்கள்.(ஆசிரியர்களின் பாடநெறி மற்றும் பயிற்சிகள் தொடர்பான தரங்களை உருவாக்குவதில் 2014 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க முன் பிள்ளைப் பருவ சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. பௌதீகத் தரங்கள்.
    - ஐ. சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு 2006 ஆம் ஆண்டு வெளியிட்ட ''சரியான ஆரம்பத்திற்கு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தரங்கள்''
    - II. சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு 2006 ஆம் ஆண்டு வெளியிட்ட நீர்,சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான தரங்கள்.(Minimum standards and guidelines for water,sanitation and hygiene in preschools.)
    - ஐஐஐ. உடல் ஊணமுற்ற பிள்ளைகளுக்காக தரங்களைத் தயாரிப்பதில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.05.17 ஆந் திகதிய 2007/09 இலக்க சுற்று நிறுபம் இதற்கென பயன்படுத்தப் படுகின்றது.
    - ஐஏ. விளையாட்டு முற்றம், சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் 2002.12.05 அன்று வெளியிட்ட ''பிள்ளைப்பருவத்தின் சிந்தனைக்கும் உடலுக்கும் சுகத்தை அளிக்கும் இடம்'' வெளியீடு பயன்படுத்தப்படுகின்றது.

**முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தித் தரங்களை தயாரிப்பதில் பங்களிப்பு நல்கியோரின் பெயர்ப் பட்டியல்.**

| **இல.** | **வள நபரின் பெயர்.** | **பதவி** | **உத்தியோக முகவரி.** |
|---|---|---|---|
| 1 | திரு.ஆனந்தசிரி கொடகந்த | பொறுப்பதிகாரி. | முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை,பிங்கராவ,பதுளை. |
| 2 | திருமதி.டப்.எம்.ஜயந்தா குணவர்தன | அதிபர் | முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை,பிங்கராவ,பதுளை. |
| 3 | திரு.வை.எம்.நிமல் சமரசிரி. | செயற்றிட்ட உத்தியோகத்தர் | கோட்டக் கல்விப் பணிமனை,சியம்பலாண்டுவ. |
| 4 | திருமதி.ஜீ.கே.கே.தமயந்தி. | செயற்றிட்ட உத்தியோகத்தர் | வலயக் கல்விப் பணிமனை,பண்டாரவளை. |
| 5 | திரு.சுதீர ரத்னாயக்க. | மாவட்ட முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர். | மாவட்ட செயலகம்,மொனராகலை. |
| 6 | திருமதி.எம்.ஏ.இந்த்ராணி. | மாவட்ட முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர். | மாவட்ட செயலகம், பதுளை. |

**முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தித் தரங்களை தயாரிப்பதில் பங்களிப்பு நல்கியோரின் பெயர்ப் பட்டியல்.**

| இல. | வள நபரின் பெயர். | பதவி | உத்தியோக முகவரி. |
|---|---|---|---|
| 1 | திருமதி.ஹர்ஷனி | முன்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர் | பிரதேசச் செயலகம் புத்தல. |
| 2 | திரு.வை.எம் நிமல் சமரசிரி | செயற்றிட்ட உத்தியோகத்தர | கோட்டக் கல்விப் பணிமனை,சியம்பலாண்டுவ. |
| 3 | திரு.ஆர் எம் மங்கள தேசப்பிரிய. | முன்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர் | பிரதேசச் செயலகம் படல்கும்புர |
| 4 | திருமதி. ரூபிகா ரஞ்சனி. | குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர். | சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்,பசரை. |
| 5 | திருமதி.வீ.ஜே.எம்.நிரோஷா தில்ஹானி | குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர். | சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்,லுனுகலை. |
| 6 | திருமதி.ஆர்.எம். நிலந்தி பிரியதரஷினி | முன் பள்ளி ஆசிரியர். | லிட்டில் பர்ட்ஸ்.முன் பள்ளி,படல்கும்புர |
| 7 | திருமதி.டீ.கே.எம்.சம்பிகா சந்தமாலி. | முன் பள்ளி ஆசிரியர். | தம்மானந்த சிகிதி முன் பள்ளி,ஹிந்தகொட,பதுளை. |
| 8 | திருமதி.ஏ.எச்.டீ.ஐ.கருனாரத்ன. | முன் பள்ளி ஆசிரியர். | பிரதேச சபை, சமனல முன்பள்ளி,பதுளை. |
| 9 | திரு.கே.எம்.சமன். | செயற்றிட்ட உத்தியோகத்தர் | கோட்டக் கல்விப் பணிமனை,புத்தல. |
| 10 | திரு.ஜே.ஈ.சுதீர ரத்னாயக்க. | மாவட்ட முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர். | மாவட்ட செயலகம்,மொனராகலை. |
| 11 | திருமதி.ஈ.ஏ.குணசீலி. | ஆசிரிய ஆலோசகர். | கோட்டக் கல்விப் பணிமனை,வெள்ளவாய. |
| 12 | திருமதி.கே.ஏ.என்.ஐ.சுதர்சனி. | முன்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர் | பிரதேசச் செயலகம் லுனுகலை. |
| 13 | திருமதி.நதீகா திசானாயக்க | முன்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர். | பிரதேசச் செயலகம் ரிதிமாலியத்த |
| 14 | திருமதி.கே.டீ.எசிலின். | முன் பள்ளி ஆசிரியர். | ஸ்ரீ விஜயனந்த முன்பள்ளி,புஸ்ஸல்லாகந்த,பத்தனவத்த. |
| 15 | டீ.எம்.மல்லிகா | முன் பள்ளி ஆசிரியர். | இல.215,11 ஆம் கட்டை,படல்கும்புர. |
| 16 | திருமதி.ஆர். எம் இந்த்ராவதி. | ஆசிரிய ஆலோசகர். | கோட்டக் கல்விப் பணிமனை,எல்ல |
| 17 | திரு.ஏ.எம்.எச்.எம்.பண்டார | செயற்றிட்ட உத்தியோகத்தர் | கோட்டக் கல்விப் பணிமனை,மடுல்ல. |
| 18 | திரு.ஏ.எம். ஜானக்க சுரங்க. | முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர். | பிரதேசச் செயலகம் மொனராகலை. |
| 19 | திருமதி. பீ.ஜீ.கே.தமயந்தி. | செயற்றிட்ட உத்தியோகத்தர் | வலயக் கல்விப் பணிமனை,பண்டாரவளை. |
| 20 | திருமதி.டீ.எம்.மல்காந்தி | முன்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர். | பிரதேசச் செயலகம் பிபில |
| 21 | திருமதி.பீ. ஸ்ரீ தேவி. | ஆசிரிய ஆலோசகர். | கோட்டக் கல்விப் பணிமனை,வெள்ளவாய. |
| 22 | திருமதி.டீ.எம்.நிஷாந்தி தர்ஷிகா | முன் பள்ளி ஆசிரியர். | மங்கள,பெல்கஹதென்ன. |
| 23 | திருமதி.ஏ.எம்.சுதர்ஷினி பிரியங்கிகா | முன் பள்ளி ஆசிரியர். | நியோலியன் முன்பள்ளி,இல.91.ஜயதிலக்க மாவத்தை,ஹாலி எல |
| 24 | திருமதி.ஹிரோஷனி விக்ரமசூரிய. | முன்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர். | பிரதேசச் செயலகம், பண்டாரவளை |
| 25 | திருமதி.பீ.ஜீ.சாந்தனி ஸ்ரீமதி. | சிறுவர் உரிமை அபிவிருத்தி உத்தியோகத்தர். | பிரதேசச் செயலகம் ரிதிமாலியத்த |

| இல. | வள நபரின் பெயர். | பதவி | உத்தியோக முகவரி. |
|---|---|---|---|
| 26 | திருமதி.பீ.எம்.பஸ்னாயக்க. | சிறுவர் உரிமை அபிவிருத்தி உத்தியோகத்தர். | பிரதேசச் செயலகம் ரிதிமாலியத்த |
| 27 | திருமதி.எம்.ஏ.இந்த்ரானி | முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர். | மாவட்ட செயலகம்,பதுளை |
| 28 | திரு.எஸ்.இந்திரராஜ் | சுகாதார முகாமையாளர். | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு,பதுளை. |
| 29 | திரு.ஆர்.எம்.எச்.தர்மசேன | பிரதேச சமூக நேரடி உத்தியோகத்தர். | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு,பதுளை. |
| 30 | திரு.ஆர்.எம்.திலக்கசிரி. | மாவட்ட சிறுவர் உரிமை அபிவிருத்தி உத்தியோகத்தர். | மாவட்ட செயலகம்,மொனராகலை. |
| 31 | திரு.பத்மசிரி ஜயசிங்க | சிறுவர் உரிமை அபிவிருத்தி உத்தியோகத்தர். | பிரதேசச் செயலகம் ரிதிமாலியத்த |
| 32 | திருமதி.சிரானி குணரத்ன | சிறுவர் உரிமை அபிவிருத்தி உத்தியோகத்தர். | பிரதேசச் செயலகம் ரிதிமாலியத்த. |